DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -6

| | | |
|---|---|---|
| Name | : திரு. ஜோதிவேல் | Caste: |
| Father's Name: | திரு. சிவக்கொழுந்து | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 3rd day of January -2024.

**A1 , A2, A5 to A9, A11, A13 to A18 present. A3 produced.**

**Date: 03.01.2024**

**முதல் விசாரணை**

நான் அரியலூர் மாவட்டம் வங்குடிகிராமத்தில் கீழதெருவில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். இவ்ழக்கில் இறந்துபோன ஐவரையும் தெரியும். சாட்சிகள் அமிர்தலிங்கம், ராஜலிங்கம் ஆகியோர்களை தெரியும். அவர்கள் எனக்கு பங்காளி உறவுமுறை. ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்களும் எனது உறவுகாரர்கள் தான். எங்கள் ஊர் பஞ்சாயத்துதலைவர் பதவி தேர்தலில் மச்சகேந்திரன் என்பவர் போட்டியிட்டார். அந்த தேர்தல் சம்மந்தமாக எதிரிகளுக்கும், காசிநாதன் குடும்பத்திற்கும் விரோதம் இருந்து வந்தது.

இப்போதிலிருந்து சுமார் 15 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் நான் மதியழகன் வீட்டிற்கு போய்இருந்தேன். அங்கு வைத்து நான், மதியழகன், பிரகாஷ் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது காலை சுமார் 10.00 மணி இருக்கும். மதியழகன் வீட்டிற்கு எதிர்புறம் 10 அடி தூரம் கிழபுறமாக பூராசாமி பெட்டிகடை இருக்கிறது.

அப்போது கிழக்கேயிருந்து ராஜலிங்கம், மகாலிங்கம் மற்றும் காசிநாதனின் மற்றொரு மகன் ஆகியோர் ஓடிவந்தார்கள். அவரது பெயர் நினைவில்லை. மேற்கேயிருந்து எதிரிகள் ரமேஷ்த.பெ.சக்திவேல், திருஞானம், ரமேஷ் த.பெ.ராமசந்திரன், ராஜதுரை, மற்றும் நிறையபேர் வந்தார்கள். எதிரிகள் கைகளில் அரிவாள் வைத்திருந்தார்கள்.

எதிரி ரமேஷ் த.பெ.சக்திவேல் என்பவர் காசிநாதன் மகன் தர்மலிங்கத்தை அரிவாளால் கழுத்தில் வெட்டி தலையை துண்டாக எடுத்து அத்தலையை காளியம்மன் கோவில் சூலாயுதத்தில் குத்திவைத்துவிட்டார். பின்னர் கிராமமக்கள் சொன்னதன்பேரில் நான் சென்று பார்த்தபோது எதிரி பாஸ்கரன் என்பவரது வீட்டின் எதிர்புறம் சுரேஷ் என்பவர் வெட்டுபட்டு இறந்துகிடந்தார். அவரது உடல் வாய்க்காலில் விழுந்து கிடந்தது.

அதற்கும் சற்று கிழக்கே உள்ள இடத்தில் பிரபு என்பவரது சடலம் முண்டமாக தலையில்லாமல் கிடந்தது. தலையை நான் பார்க்கவில்லை. அதன் பின்னர் நான் வீட்டிற்கு போய்விட்டேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். (அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத விரும்பவில்லை).

<u>8 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் யார்யார் எப்படி இறந்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் யார் முதலில் இறந்தது யார் பின்னால் இறந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சம்பவமானது 10 முதல் 15 நிமிடத்தில் நடந்து முடிந்துவிட்டது என்றும் தர்மலிங்கம், அவரது தகப்பனார் காசிநாதன், தாயார் ஜானகியம்மாள் ஆகியோர் வெட்டப்பட்டதை மட்டுமே நான் பார்த்தேன் என்றும், சுரேஷ் மற்றும் பிரபு ஆகியோர் வெட்டப்பட்டதை நான் பார்க்கவில்லை என்றும் சாட்சி கூறுகிறார்.

காசிநாதன், ஜானகியம்மாள் ஆகியோர் வெட்டப்பட்டதை நான் பார்த்ததாக எனது முதன்மைசாட்சியத்தில் சொல்லாமல் குறுக்குவிசாரணையில் தான் முதல்முறையாக சொல்லுகிறேன் என்றால் சரிதான். 8 ஆம் எதிரி பாஸ்கரனுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் அவரும் இருந்தார் என்று சாட்சி

சுயமாக கூறுகிறார். நான் சொன்ன நாள், நேரம், இடத்தில் நான் இல்லை என்றால் சரியல்ல.

<u>13 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு சம்மந்தமாக நான் சொல்லவேண்டிய சங்கதிகள் அனைத்தையும் அரசு தரப்பு வழக்கறிஞர் என்னை விசாரித்தபோதே சொல்லிவிட்டேன் என்றால் சரிதான். வேறுஎதுவும் சொல்லவேண்டியதில்லை. காசிநாதன் குடும்பத்திற்கும், எதிரிகளுக்கும் இடையே தேர்தல் சம்மந்தமாக முன்விரோதம் இருந்ததாக நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

நான் அப்படி சொல்லவில்லை என்றாலும், தற்போது தான் முதல்முறையாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவத்தின்போது நான் சம்பவஇடத்தில் இல்லை என்றாலும், சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும், போலிசார் சொல்லிகொடுத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

**3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**எதிரிகள் 1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 ஆகியோர் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜரில்லை. எனவே அவர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.